கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள், சென்னை—600 006.
முன்னிலை : முனைவர் .மு.தேவதாஸ்.,எம்.எஸ்ஸி.,எம்.பில்.,பி.எச்.டி.,எப்.பி.பி.எஸ்.,

ந.க.எண். 64057/பி2/2015 நாள். 0?.07.2015

பொருள் : கல்லூரிக் கல்வித் துறை – அரசுக் கல்லூரிகள் – கல்லூரி துறைத் துறை தலைவர்கள் கட்டுப்பாட்டில் பணிபுரியும் ஆய்வக உதவியாளர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் – பணிநேரம் வரையறை செய்தல் – தொடர்பாக

பார்வை 1) சென்னை – 6, கல்லூரிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.31573/பி2/2006 நாள்.28.9.2007.
2) அரசு ஆணை (நிலை) எண்.380 உயர்கல்வி (ஜி1) துறை நாள்.30.11.2006.
3) அரசு ஆணை (நிலை) எண்.309 உயர்கல்வி (ஜி1) துறை நாள்.18.8.2009.

-----

பார்வையில் காணும் இயக்குநரின் செயல்முறைகள் மற்றும் அரசாணைகள் மீது கல்லூரி முதல்வர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அதில் அரசுக் கல்லூரிகளில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பணி நேரம் தொடர்பாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் பத்தி 3 ல் அலுவலக நேரம் காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.45 வரை எனவும், இதில் மதியம் 1.00 மணியிலிருந்து 2.00 மணிக்குள் 30 நிமிடங்கள் உணவு இடைவேளை வழங்கியும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி அரசுக் கல்லூரிகளில் துறைத் தலைவர்களின் கட்டுப்பாட்டில் பணிபுரியும் ஆய்வக உதவியாளர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள், முதல் சுழற்சி காலையில் துவங்கும் நேரத்தில் / கல்லூரி முதல்வர்கள் / துறைத் தலைவர்களால் தெரிவிக்கப்படும் நேரத்தில் வருகை புரிந்து அதிலிருந்து 7.45 மணி நேரம் பணிபுரிய வேண்டும் என பணிபளு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் பார்வை (3)ல் காணும் அரசாணையின்படி பணிபுரிய அனுமதிக்கப்பட்டுள்ள ஆய்வக உதவியாளர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் மட்டும் இரண்டாம் சுழற்சி முடியும் நேரம் வரை முழுவதுமாக பணிபுரிய வேண்டும் என தெரிவிக்கலாகிறது.

மேற்கண்ட விவரங்களின்படி அரசுக் கல்லூரிகளில் துறைத் தலைவர்களின் கட்டுப்பாட்டில் பணிபுரியும் ஆய்வக உதவியாளர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள்

முதல் சுழற்சி காலையில் துவங்கும் நேரத்தில் வருகை புரிந்து அதிலிருந்து 7.45 மணி நேரம் முதல்வர்கள் / துறைத் தலைவர்களால் பணிக்கப்படும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கலாகிறது.

03-07-15

கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ)

பெறுநர்

1. அனைத்து அரசுக் கல்லூரி முதல்வர்கள்
2. அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்
   (தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்)

நகல்

1. உதவி இயக்குநர் ( உதவி பெறும் கல்லூரிகள்)
2. இயக்கக "எப்" மற்றும் "ஜி" பிரிவுகள்